## இணைப்பு V.

[438ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 401—க்கான விடையைக் காண்க.]

### விடை

பட்டினப்பாக்கத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கீழ் பொதுமக்களுக்கான குடியிருப்புகள் (Public rental flats) மற்றும் தமிழ்நாடு அரசு பணியாளர் வாடகை வீட்டு வசதித் திட்டக் குடியிருப்புகள் (Tamil Nadu Government Servants Rental Housing Scheme) ஆகிய இரண்டு வகையான குடியிருப்புகள் உள்ளன. பொது மக்களுக்கான குடியிருப்புகள் மொத்தம் 73. அவை மூன்று பிரிவுகளாக உள்ளன:

பிரிவு (அ)— மாதம் ரூ. 350-ஐ வாடகையாகக் கொண்டவை.

பிரிவு (ஆ)—மாதம் ரூ. 338-ஐ வாடகையாகக் கொண்டவை.

பிரிவு (இ)—மாதம் ரூ. 192-ஐ வாடகையாகக் கொண்டவை,

இந்தக் குடியிருப்புகள் பொதுமக்களுக்கு அவர்களுடைய விண்ணப்பத்தின் முதுநிலையின் அடிப்படையில்தான் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இதற்கான வாடகைகள் அரசால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சூத்திரத்தின் (formula) அடிப்படையில் நிர்ணயம் செய்யப்படும் வாடகைகள் ஆகும்.

தமிழ்நாடு அரசு ஊழியர் வாடகை வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், நடுத்தர வருமானமுள்ளவர்களுக்கு (Middle Income Group) என 23 குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இந்த குடியிருப்புகளுக்கான வாடகையை அரசு, வீட்டு வசதி வாரியத்திற்குச் செலுத்தி விட்டு, அரசு ஊழியர்களிடமிருந்து அவர்களுடைய அடிப்படைச் சம்பளத்தில் 10 சதவீதத்துடன் வீட்டு வாடகைப் படியையும் சேர்த்து வாடகையாக வசூலிக்கிறது.

மேலும், தமிழ்நாடு அரசு பணியாளர் வாடகை வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் குறைந்த அல்லது மிகவும் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கான 1,112 குடியிருப்புகள் அரசு ஊழியர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. ஒதுக்கீடு பெறும் அரசு ஊழியரிடமிருந்து வாடகையாக அவர்கள் வீட்டு வாடகைப்படியுடன் அடிப்படைச் சம்பளத்தில் 10 விழுக்காடும் பிடித்தம் செய்யப்படுகிறது.

ரூபாய் 200-லிருந்து ரூ. 299 வரை சம்பளம் வாங்குபவர்களுக்குரிய இல்லங்களில், 2—10—1970-க்கு முன்பாகக் குடிபுகுந்த சில ஒதுக்கீடு பெற்றவர்களின் அடிப்படைச் சம்பளத்தில் 10 சதவீதத்தோடு, அவர்களுக்குரிய வீட்டு வாடகைப்படியையும் சேர்த்தால் வரும் தொகையானது, அவ்வில்லங்களின் சிக்கன வாடகையாகிய (Economic rent) ரூ. 58-ஐ விட அதிகமாகிறது. ஆனாலும், அவர்கள் மட்டும் சிக்கன வாடகையாகிய ரூ. 58-யே செலுத்தி வருகின்றனர்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

TAMIL NADU LEGISLATURE LIBRARY
6 அக் 1976
MADRAS